பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 18 செவ்வாய்க்கிழமை ( 01 - 02 - 2000 ) VALAMPURI ஒலி: 44

## ★ உரும்பிராயில் கைதான மாணவர்களை

# மூன்று தினங்களுள் விடுவிப்பதாக

# புலனாய்வு அதிகாரிகள் தெரிவிப்பு!

## யாழ்.மாவட்ட எம்.பி. டக்ளஸ் தகவல்

(கொழும்பு)

கொழும்பில் இருந்துவந்த விசேட குற்றத்தடுப்பு புலனாய்வுத் துறையினரால் கைதுசெய்யப்பட்டு கொழும்பு கொண்டு செல்லப்பட்ட பாடசாலை மாணவி, அவரது சகோதரன் மற்றும் தாய் ஆகிய மூவரும் கைதுசெய்யப்பட்டமையை ஆட்சேபித்து, குடாநாட்டு மாணவர்கள் நேற்று முழு அளவில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

மேற்படி பகிஷ்கரிப்பை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் ஈ. பி. டி. பி செயலாளர்நாயகமும், யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் ஆகியோருடன் தொடர்பு கொண்டதை அடுத்து கைதானவர்களை மூன்று தினங்களுக்குள் விடுவிப்பதாகப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் உறுதிமொழி அளித்தனர்.

உரும்பிராயில் கடந்த மாதம் 25ம் திகதி கைது செய்யப்பட்ட மாணவர்களை மூன்று தினங்களுக்குள் விடுதலை செய்வதாக விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம் மாணவர்கள் கைது தொடர்பாக டக்ளஸ் எம். பி. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி. சில்வாவுடனும் தொடர்பு கொண்டிருந்தார்.

மாணவர்களின் விடுதலை தொடர்பாகயாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ்தேவானந்தா விசேட புலனாய்வுப் பிரிவுடன் நேற்றுத் தொடர்பு கொண்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டதா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள் நேற்றும் பாடசாலைகளை பகிஷ்கரித்தனர்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் கைதை ஆட்சேபித்து யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான பாடசாலைகளில் மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ். நகரிலுள்ள பிரபல பாடசாலைகள் நேற்று நண்பகலுக்குப் பீன்பு மாணவர்களின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

வடமராட்சிப் பகுதிகளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைது செய்யப்பட்ட மாணவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும்

### கூட்டணி எம்.பி சேனாதிராஜா கோரிக்கை

உரும்பிராயில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரி தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. எஸ், சேனாதிராஜா ஜனாதிபதிக்கு அவசர கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

மாணவர்களின் கைது விடயத்தில் தாங்கள் உடன் தலையிட்டு அவர்களை விடுதலை செய்ய வேண்டுமெனவும், மாணவர்களின் கைதினால் யாழ். குடாநாட்டு மாணவர்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாகவும் அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வவுனியா தபாலகக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு நட்டஈடு

(வவுனியா)

வவுனியா பிரதம தபால் நிலையத்தில் [illegible]ந்தோரில் இடம் பெற்ற குண்டு வெடிப்பினால் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கும் [illegible]மையான காயங்களுக்கு [illegible]ள்ளானவர்களுக்கும் புனர்வாழ்வு அமைச்சினால் நட்டஈடு வழங்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்டச் செயலாளர் திரு. கே. கணேசன் தெரிவித்துள்ளார்.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கும், காயமடைந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பஸ்ஸில் குண்டு வெடிப்பு 23 பேர் கைது

(குருநாகல்)

குருநாகல் பஸ்ஸில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக 23 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் குருநாகல் பகுதியை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

## மின்மாற்றி குண்டு வைத்து தகர்ப்பு

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளம், மரக்காரம் பளை ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த இரு மின்மாற்றிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறு இரவு இடம் பெற்ற இச் சம்பவத்தினால் மின்சார சபைக்கு சுமார் 12 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (103)

## ஓயாத அலைகள் 3 நடவடிக்கையில் புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

ஓயாத அலைகள் நடவடிக்கையின் போது புலிகள் தரப்பில் உயிரிழந்த மேலும் மூவரின் பெயர்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு;

★ லெப். கேணல். தர்ஸனன் கந்தையா உதயகுமார் பூநகரி.

வீரவேங்கைகளான

★ கானகன் செல்வராஜா செந்தில்குமார் யாழ்ப்பாணம்.

★ தமிழன் சச்சிதானந்தன் கலிஸ்ஸ் யாழ்ப்பாணம்.

(ந)

## காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட மூவர் நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் காங்கேசன் துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூவரை நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிபதி இ.த. விக்னராசா முன்னிலையில் ஆஜர்ப் படுத்தப் பட்டனர்.

ஏ. பத்மினி, ச. சர்மிலா ம. மேரி சர்மிலா ஆகியோரே ஆஜர்ப் படுத்தப்பட்டவர்களாகும்.

இவர்களை விசாரித்த நீதிபதி எதிர்வரும் ஏப்ரல்மாதம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா செ. ச. இணைப்பதிகாரி கிஷோரின் வழக்கு விசாரணை மார்ச் மாதம் 3-ந் திகதி நடைபெறும்

(கொழும்பு)

வவுனியா செஞ்சிலுவைச் சங்கத்தின் இணைப்பதிகாரி சிவநாதன் கிஷோர் மற்றும் சாரதி நாகமணி ஈஸ்வரநாதன் ஆகியோரின் வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 3-ந் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நேற்றையதினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரதாஸ நாணயக்கார முன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகசபை இப்போதைக்கு தேவை இல்லை

### வரதராஜப்பெருமாள்

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு மாகாண சபைக்கான இடைக்கால நிர்வாகசபை இப்போதைக்கு தேவை அற்றது என்று முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர்வரதராஜப் பெருமாள் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரசியல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிறிசேன கூரே தலைமையில் புதிய அரசியல் கட்சி உதயம்?

(கொழும்பு)

ஐ.தே கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் சிறிசேன குரே புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

புதிய அரசியல் கட்சியை ஆரம்பிப்பது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் இரு பிரதான அரசியல் கட்சிகளுமான பொ. ஐ, முன்னணி, ஐ. தே. கட்சி ஆகியவற்றின் தலைமைகளின் போக்கில் தாம் கொண்டுள்ள அதிருப்தியினாலேயே இப் புதிய கட்சியை அமைப்பதாகவும், இதன் மூலம் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தரப்பினருக்கு மக்களின் அபிலாசைகளை எடுத்துக் கூற முடியும் எனவும் குறிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பலாலி ஆசிரியர் கலாசாலை

## நாளை மறுதினம் மூடப்பட்டு 14ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும்

### அதிபர் தெரிவிப்பு

(செம்பியன்பற்று)

பலாலிஆசிரியர் கலாசாலை வியாழக்கிழமை 03 ஆம் திகதி விடுமுறைவிட்டு மீண்டும் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகும் என பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் கு. சதாசிவமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், பலாலி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் மற்றும் விரிவுரையாளர்கள் எதிர்வரும் 08 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ள பதவி உயர் நேர்முகப்பரீட்சைக்கு செல்லவேண்டி இருப்பதாலேயே மேற்கண்டமுடிவு எடுக்கப்பட்டது.

எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் மூன்றுவாரங்களுக்கு இரண்டாம்வருட ஆசிரிய மாணவர்களிற்கான கற்பித்தல் பயிற்சி நடைபெறும் என்றார். (க-42)

### குளோரின் இடப்பட்டது

(இளவாலை)

சில்லாலைப் பகுதியைச் சேர்ந்த கிணறுகளுக்கு குளோரின் இடப்பட்டுள்ளது.

சமுர்த்தி ஊழியர்களின் மேற்பார்வையின் கீழ் இந் நிகழ்வு இடம்பெற்றது. (க-28)

### இன்று

யாழ். காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தின் தை பொங்கல் விழாவும் தரம் 1 மாணவர்களை வரவேற்றல் நிகழ்வும் இன்று முற்பகல் 8 மணிக்கு அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்,

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகதீவக உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. சண்முகநதனும் சிறப்பு விருந்தினராக சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர் ஆ.பலராமனும் கலந்துகொள்வார்கள். (க-4)

### நாட் காட்டிகள் வழங்கப்பட்டன

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அனைவருக்கும் கையேடுகளும் 2000 ம் ஆண்டுக்கான நாட்காட்டிகளும் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க-11)

## வானொலி, தொலைக்காட்சிகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

தபால் மா அதிபரின் அறிவித்தலுக்கிணங்க யாழ்ப்பாணத்திலும் வானொலி, தொலைக்காட்சிகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு வருவதாக தபால் திணைக்கள வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கான கால அவகாசம் நேற்றுடன் முடிவடைவதால் இனிவரும்காலத்தில்அனுமதிப்பத்திரம்பெறுவோர்அதற்கான குற்றப் பணத்தினையும் செலுத்தியே அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள முடியும். என்று தெரிவித்துள்ள தபால் திணைக்கள வட்டாரத்தினர் மேற்படி கருவிகளுக்கான குற்றப்பணமாக அனுமதிப் பத்திரத்திற்காக செலுத்தப்படும் பணத்தின் 10 சதவீதம் அறவிடப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

வீட்டுப் பாவனையிலுள்ள வானொலிகளுக்கு 50 ரூபாவும் ஏனைய பிரத்தியேக பாவனையிலுள்ள வானொலிகளுக்கு 30 ரூபாவும் வர்ணத் தொலைக்காட்சிக்கு 250ரூபாவும், கறுப்பு வெள்ளை தொலைகாட்சிக்கு 150 ரூபாவும் வருடமொன்றிற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக பொதுமக்களிடமிருந்து அறவிடப்பட்டு வருகிறது.

மேற்படி உபகரணங்களை பாவனையில் வைத்திருக்கும் பொதுமக்கள் தத்தமது பகுதி தபாலகங்களில் இவற்றிற்கான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள முடியும். (க-14)

# நினைவலையில் ஆண்டு - 7



தோற்றம்: 26 — 04 — 1926

மறைவு: 19 — 01 — 1993

## அமரர் உயர்திரு இ. ச. பேரம்பலம் (E. S. P.) அவர்கள்

(E. S. P. & CO நிறுவனத்தின் உரிமையாளர்)

திதி - 01 . 02 . 2000 - திரியோதசி

அன்பு சொரிந்து எம்மை அரவணைத்து
ஆளாக்கி இன்பத் தொழில் பலவும் ஈந்து
நாநிலத்து நன் மக்களாக்கிய வெற்றித் தலைவனே!
விந்தை மிகு பல தொழில்கள் நாம் பயின்று
இவ் வையகத்துள் பலர்வாழ்த்த வாழ்கின்றோம் ஐயாவே!

பெற்ற பிள்ளைகள் பெருஞ்சிறப்புடனும்
உற்ற மனைவி உடன் உழைத்திடவும்
சீர்த்த வாழ்வு செம்மையில் வாழ்ந்து
யாவரும் தர்மத்தின் வழி செல்ல
வழிகாட்டியே வாழ்ந்த தந்தையே
ஆண்டு ஏழு ஓடி மறைந்தாலும்
உங்களை மறவோம் ஐயாவே

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்
'மணிஓசை'
383, கோவில் வீதி,
நல்லூர்.

50, 52, 54, காஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/40)

யாழ்ப்பாணம்

# மட்டக்களப்பு பாஸ் முறையினை பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தவுள்ள பாஸ் முறையை மீள் பரிசீலனை செய்யுமாறு கூறி, மட்டக்களப்பு ஐக்கியதேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவிற்கு அவசர பக்ஸ் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதற்கு முன் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், பொன். செல்வராசா ஆகியோரும் பாஸ் முறையை வன்மையாகக் கண்டித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

மௌலானா அனுப்பிய பக்ஸ் செய்தியில்;

'இந்தப் பாஸ் முறையில் கைவிரல் அடையாளம் பதிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கைபானது எந்தவொரு நாட்டிலும் இல்லை என்றும்-

இந்த பாஸ் நடைமுறையினை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் எம். பி. மௌலானா கோரியுள்ளார். (கு-60)

## காரைநகர் விவசாய சம்மேளனத்திற்கு சூடடிக்கும் இயந்திரம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் விவசாய சம்மேளனத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சூடடிக்கும் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அண்மையில் காரைநகருக்கு விஜயம் செய்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஆ. டபிரூ. வெயின் அங்குள்ள விளைநிலங்களைப் பார்வையிட்டதோடு விவசாயிகளின் குறைகளையும் கேட்டறிந்தார்.

இவருடன் வடமாகாண கமநல சேவை நிலையத்தின் உதவி ஆணையாளர் கே. சுந்தரேசனும் உடன் சென்றிருந்தார்.

விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க வழங்கப்பட்ட இச் சூடடிக்கும் இயந்திரத்தின் சம்பிரதாய பூர்வ ஆரம்பம் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் காரை நகர்ப் பகுதி கிராம சேவையாளர்கள் செல்வி. திருமகள் ஐ. க. நடேசா, எஸ். கே. சிவலிங்கம் ஆகியோரும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்த கே. நடராசா உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந)

## பண்ணிசைப் போட்டி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே யாழ். மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு நடாத்தும் பண்ணிசைப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆண்கள், பெண்களுக்குத் தனித்தனியாக மூன்று பிரிவுகளில் நடத்தப்படும் இந்தப் பண்ணிசைப் போட்டி இம்முறை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய நான்கு நிலையங்களில் நடாத்தப்படவுள்ளதாகவும், இதற்கான விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்களிடம் அல்லது யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியில் இருபது ரூபா செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்று சமய விவகாரக் குழுத் தலைவர் வைத்தியக்கலாநிதி இ. தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டியின் பரிசளிப்பு மகா சிவராத்திரி தினத்தன்று இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## ஐ. தே. க. மாற்றுக்குழுவின் மனு; கட்சி நீக்கம் மனித உரிமை மீறலாகும்!

### சட்டத்தரணிகளின் வாதம்

(கொழும்பு)

''ஐக்கியதேசிய கட்சியிலிருந்து நீக்கப்பட்ட மாற்றுக் குழு உறுப்பினர்களை ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாது—

அவர்கள் அரசை ஆதரித்தார்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கியமை ஜனநாயக, அடிப்படை மனித உரிமைமீறல் சம்பவமாகும்''

இந்த மாற்றுக்குழு உறுப்பினர்கள் நீதிமன்றில் சமர்ப்பித்த மனுமீதான விசாரணைகள் அண்மையில் இடம்பெற்றபோது அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணியான ஈ. வி. விக்ரமநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ் மனுமீதான விசாரணைகளை உயர் நீதிமன்ற மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவொன்று மேற்கொண்டு வருகிறது. (கு-7)

## நிர்வாகிகள் தெரிவு

(இணுவில்)

இணுவில் கிழக்கு சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தின் புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

தலைவர். கு. ரவிச்சந்திரனும் செயலாளர். ம. யோகானந்தன். பொருளாளர். க. பரமேஸ்வரன். கணக்காய்வாளர் க. யோகராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (கு-49)

## குறைந்த விலையில் நெல் கொள்வனவு மட்டு. விவசாயிகள் கவலை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளபோதிலும் நெல்லின் விலைவீழ்ச்சி குறித்து விவசாயிகள் கவலைஅடைந்துள்ளனர்.

அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை போன்ற முக்கிய விவசாய பகுதிகளில் பெரும்போக அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

66 கிலோ கொண்ட ஒரு மூடை நெல்லின் அரிசியின் உத்தரவாத விலை 825 ரூபாவாகும். ஆனால் தனியார் வர்த்தகரும் அரிசிஆலை உரிமையாளரும் ஒருமூடை நெல் ரூபா 700 க்குக் குறைவாகவே கொள்வனவு செய்கின்றனர்.

இந்த நிலையில் உத்தரவாத விலையில் கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு உரிய விலைக்கு நெல்கொள்வனவுக்கு வகைசெய்யுமாறு ஜனாதிபதிக்கு விவசாயிகள் அமைப்பு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

விவசாயத்துறை அமைச்சர் டி. எம். ஜயரத்ன, அம்பாறை அரச அதிபர் ஐ. விக்கிரமரத்தின ஆகியோருக்கும் இம் மகஜரின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (கு-60)

## உபகரணங்கள் கையளிப்பு

யு. என். எச். சீ. ஆர் நிறுவனத்தினால் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட மரவேலைத்தளபாடங்கள், ஓட்டு உபகரணங்கள், நீரிறைக்கும் இயந்திரம் போன்றபொருட்கள் கோப்பாய் பிரதேசசெயலகம் ஊடாக கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (க-14)

# மலேரியா நோயின் தாக்கம் வன்னியில் வெகுவாக அதிகரிப்பு

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் மலேரியா, மூளை மலேரியா நோய்களின் தாக்கம் அதிகரித்து வருகிறது.

மருத்துவமனைகளில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் முன்னைய காலங்களை விட தை மாதத்தில் அதிகமானோர் மலேரியா, மூளை மலேரியா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

அதிக எண்ணிக்கையானோர் வைத்திய சாலைகளில் தங்கிச் சிகிச்சை பெற்றதை அவதானிக்க முடிந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை—

மலேரியா தடுப்பு நடவடிக்கைகள், இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டதே இதற்குக் காரணமாகும் என்று கூறப்படுகிறது. (கு-9)

## வன்னிக்கு அனுப்பப்பட்ட 'மலத்தியோன் ஒரு மாவட்டத்துக்கே போதாது

### மலேரியா தடுப்புப் பிரிவினர் தகவல்

(வவுனியா)

வன்னி பெருநிலப்பரப்பு மலேரியா தடுப்புப்பகுதிக்கென வவுனியாவில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டமலத்தியோன் பவுடர் போதுமானதாக இல்லை என்று வன்னியிலுள்ள மலேரியா தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்திற்கென 27 கிலோ பைக்கற்கொண்ட 200 மலத்தியோன் பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள மலேரியாத்தடுப்புப் பிரிவினர் இத்தொகைஒருமாவட்டத்திற்கே போதுமானதாக இல்லையென தெரிவித்துள்ளனர். (கு-14)

## முழக்கன் மயானம் பகுதியில்

# அளவிற்கதிகமாக மண் அள்ளப்படுவதால் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு, முழக்கன் பொது மயானம் அமைந்துள்ள கடற்கரைப் பிரதேசத்தில் கட்டுப்பாடில்லாது அளவிற்கு அதிகமான மண் அள்ளப்பட்டு வருவதை இட்டு அப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர்.

தற்போது பெருமளவில் இப்பகுதியில் தொடர்ந்து மண் அள்ளப்பட்டு வருவதனால் அங்கு ஏற்பட்டுள்ள பாரிய குழிகளில் கடலில் உள்ள உவர்நீர் புகுந்துவிடக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதனாலேயே அப் பகுதி மக்கள் இத்தகைய செயலை வலுவாக எதிர்த்து வருகின்றனர்.

இந்த பிரதேசம் தொடர்ந்தும் கடல் அரிப்பிற்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் கரையோரப் பிரதேசமாக இருந்து வருவதனால் முன்னைய காலங்களில் இப்பகுதியில் அனுமதியின்றி மண் வெட்டுவது தடை செய்யப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-14)

# வவுனியா பொலிஸ் வதிவிட அனுமதி பாஸ் விரைவில் மாற்றம் கொண்டுவரப்படும்

(வவுனியா)

வவுனியாவில் நடைமுறையில் உள்ள பொலிஸ் வதிவிட அனுமதிப்பத்திரத்தில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளதாக நம்பகரமான வட்டாரத்திலிருந்து தெரிய வருகின்றது.

குறிப்பாக நிரந்தர வாசிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாஸ் மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளது அதேபோல் மூன்றுமாத, ஒருவருட வெளியிடங்களுக்கு செல்லக் கூடிய அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பவர்களுடைய பாஸ்களும் பரிசீலிக்கப்படவிருக்கின்றது. இந்த நடைமுறை மிக விரைவில் வவுனியாவில் அமுலாக்கப்படும் என தெரியவருகின்றது.

புதிய நடைமுறையானது வவுனியாவில் வசிக்கும் நிரந்தரவாசிகளுக்கு பல அசௌகரியங்களை ஏற்படுத்தும். அத்துடன் இந்த நடைமுறையானது வெளியிடங்களுக்கு செல்பவர்களுடைய தொகை மட்டுப்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (க)

# தீவகக் கல்விவலயப் பாடசாலைகளில் திருக்குறள் மனன, கட்டுரைப் போட்டிகள்

(அல்லைப்பிட்டி)

தீவகக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு திருக்குறள் மனனம் செய்தல் மற்றும் திருக்குறள் சம்பந்தமான கட்டுரைப் போட்டிகளை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் ஏற்பாட்டை தீவக கல்வி வலய தமிழ் பாட பொறுப்பாசிரியரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான ம. ஜெயராமசர்மா செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தபோட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு சான்றிதழ்களும் பணப் பரிசில்களும் வழங்கப்படும் என்று வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (கு-46)

## நீதிச்சேவைகள்

# மத்தியஸ்தசபை உறுப்பினர்களுக்கு விசேட அடையாள அட்டைகள்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் கடமையாற்றும் மத்தியஸ்தர் சபைகளின் உறுப்பினர்களுக்கு விசேட அடையாள அட்டையை வழங்க நீதி அரசியலமைப்பு இன விவகார நல்லிணக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக மட்டக்களப்பு அம்பாறை மத்தியஸ்தர் சபைகளின் இணைப்பாளர் கே. கணேசராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மத்தியஸ்தர் சபைகள் இயங்கி வருகின்றன. சபைகளின் உறுப்பினர்கள் தம்மைப் பற்றிய ஆவணங்களை இதுவரை அமைச்சுக்கு அனுப்பாததாலேயே அடையாள அட்டை விநியோகம் தாமதமானதாக அவர் மேலும் தெரிவித்தார். (கு-60)

## பனம் வெல்லம் உற்பத்தி

(நெல்லியடி)

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன்இயங்கும் வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் பனை வெல்ல உற்பத்தியை சிங்க நகர்ப்பகுதியில் மேற்கொண்டு வருகிறது.

அத்தோடு பனம் பொருள் பல்தொழில் தொகுப்பு நிலையம் ஒன்றும் வெகுவிரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது. இதற்கான கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன. (க-18)

# 75 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் சிறைச்சாலைகளில் படுகொலை

[மட்டக்களப்பு]

1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வெலிக்கடை கொலை சம்பவத்திலிருந்து இற்றை வரையில் சுமார் 75 தமிழ்க் கைதிகள் சிறைச்சாலைகளில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகருமான யோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா விஜய குமார துங்கவிற்கு அனுப்பிய அவசர செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 46 தமிழ் அரசியல் கைதிகளையும் உடனடியாக அநுராதபுரம் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யும்படி மட்டக்களப்பு சிறைச்சாலை பொறுப்பதிகாரிக்கு சிறைச்சாலை ஆணையாளர் விடுத்த உத்தரவானது தமிழ் கைதிகளை கொலைக் கூடத்திற்கு அனுப்பும் முயற்சியாகும்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த சில ஆண்டுகளுக்கு மேலாக மிகவும் பாதுகாப்புடன் இருக்கும் 46 தமிழ் அரசியல் கைதிகளையும் உடனடியாக அனுராதபுரம் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யும்படி சிறைச்சாலை ஆணையாளர் உத்தரவு பிறப்பித்துள்ளது சம்பந்தமாக தங்களது உடனடிக் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகின்றேன். பெரும்பாலான இத் தமிழ் கைதிகள் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்தவர்களாகும்.

இம்மாதம் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மிருகத்தனமான தாக்குதலின் போது இரண்டு தமிழ் கைதிகள் மரணமானதையும், 38 தமிழ் கைதிகள் கடும் காயத்திற்கு உள்ளாகி இன்னும் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் சம்பவம் சம்பந்தமாகவும் இந் நேரத்தில் தங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகின்றேன்.

களுத்துறை சிறைச்சாலையில் இம்மாதம் நடைபெற்ற சம்பவம் முதலாவது சம்பவம் அல்ல, இதற்கு முன்பும் இது போன்ற பல காட்டுமிராண்டித் தனமான சம்பவங்கள் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக களுத்துறை, காலி, வெலிக்கடை ஆகிய சிறைச்சாலைகளில் நடைபெற்றுள்ளன.

இத்தனைக்கும் இச் சிறைச்சாலைகள் கைதிகளுக்கு மிகவும் பாதுகாப்பான இடங்கள் என்று கருதப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்புக்கருதி இது போன்ற சிங்களப் பகுதிகளில் அமைந்துள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை வட-கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்வதை தவிர்த்து மீண்டும் சிங்களப் பகுதிகளில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்வதில் எதுவித நியாயமும் கிடையாது என்றே நான் கருதுகின்றேன்.

அதுவும் களுத்துறை, காலி, வெலிக்கடை போன்ற சிங்களப் பகுதிகளில் அமைந்துள்ள சிறைச்சாலைகளில் இதுவரை இடம்பெற்ற சம்பவங்களுக்கு பின்பும் மட்டக்களப்பு சிறைச்சாலையில் மிகவும் பாதுகாப்பாக இது வரை காலமும் இருந்து வரும் 46 தமிழ் அரசியல் கைதிகளையும் திடீரென அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றுவது அவர்களை மீண்டும் தற்கொலைக் கூடத்திற்குள் அழைத்துச் செல்லும் செயலாகுமென நான் கருதுகின்றேன்.

எனவே இப் பாரதூரமான கைதிகள் இடமாற்றத்தில் உடனடியாக தலையிட்டு தங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் சிறைச்சாலை ஆணையாளருக்கும் இக் கைதிகள் இடமாற்றத்தை உடடியாக நிறுத்தும்படி கட்டளையிட வேண்டுமென தங்ளை நான் கேட்டுக் கொள்கின்றேன். இது சம்பந்தமாக நீதி அரசியல் விவகார அமைச்சர் ஜி. எல். பீரிசிடமும் ஜோசப் எம்.பி, புகார் செய்துள்ளார். (க)

## இணுவில் பகுதியில்

# பகல் வேளைகளில் திருட்டுக்கள்; போலிச் சாமியார்களே காரணமாம்!

(இணுவில்)

இணுவில் பகுதியில் கடந்த சில காலமாக மேற்கொள்ளப்பட்ட பகல் திருட்டுக்களுக்கு போலிச் சாமியார்களே காரணம் என்று கூறப்படுகின்றது.

இணுவில், உடுவில் பகுதிகளில் அண்மையில் பகல்வேளைகளிலே திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

இந்தப் பகுதிகளில் நடமாடும் கோயிலுக்கு பணம் சேகரிப்பவர்கள் போலவும், சோதிடம் சொல்லுபவர்கள் போலவும் நடிக்கும் திருட்டுக் கும்பல் ஒன்றே திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுவருவதாகச் சொல்லப்படுகிறது.

(கு-49)

## நல்லூர் பி. செயலர்

# வீடு சேதமடைந்தோருக்கான புனரமைப்பு நிதிபற்றி பரிசீலனை

(கல்வியங்காடு)

கடந்தகால அனர்த்தங்களினால் வீடுகள் சேதமடைந்த நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களுக்கு வீடு புனரமைப்புச்செய்வதற்கான கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மாதாந்தம் 1500 ரூபாவுக்குட்பட்ட வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கு வீடு புனரமைப்பதற்கான 25 ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு தொகுதியினருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டது தெரிந்ததே.

(கு-54)

# 31 ஆம் நாள் நினைவு அலைகளும் நன்றி நவிலலும்

## திருமிகு
## சவரிமுத்து - சந்தியாப்பிள்ளை
### (துரைச்சாமி, சாமியார்)

**தோற்றம்:- 1908 - 03 - 13**
**மறைவு:- 2000 - 01 - 02**

2000-01-02ம் திகதி நாகர் கோவில்-குடாரப்பில் காலமாகிய நாரந்தனை-மேற்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமிகு சவரிமுத்து சந்தியாப்பிள்ளையின் இறுதி ஊர்வலத்தின் போது பங்கு பற்றிய உற்றார், உறவினர், அயலவர் அனைவர்க்கும் மற்றும் குடாரப்பூர் உத்தரிய மாதா கோவில் பங்கைச் சேர்ந்த மரியாம்சேனை உறுப்பினர்கள் பங்குத் தந்தை ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றி செலுத்துகின்றோம்.

அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றுக்காக 2000-02-01ம் திகதி காலை குடாரப்பூர் உத்தரிய மாதா தேவாலயத்திலும், அன்றைய தினம் காலை 6-30க்கு யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலயத்திலும் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு இறைவனை வேண்டிட உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

குடாரப்பூர்,
நாகர்கோவில்.
2000-02-01

(கி/45)

# மிதிவெடியில் சிக்கியமாடு

(மண்டைதீவு)

மேய்ந்து கொண்டிருந்த மாடு மிதிவெடியில் சிக்கியதில் தனது முன்னங்காலை இழந்துள்ளது.

அல்லைப்பிட்டிஇலந்தையடி என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

(க-76)

# வர்த்த மானி அறிவித்தலின் பிரகாரமே பல. நோ. கூட்டுறவு சங்க தேர்தல்கள்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போது கூட்டுறவு கிளைகளில் இடம் பெற்று வரும் தேர்தல்கள் புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமே இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் காத்தான்குடி நகரசபைப் பிரிவில் உள்ள 9 கிளைகளுக்குமாக தலா 9 உறுப்பினர் வீதம் 81 பேர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிலிருந்து பேராளர்கள் தெரிவு செய்யப்பட்டு அதிலிருந்து இயக்குநர் சபையை மாவட்ட கூட்டுறவு ஆணையாளர்கள் இரு மாதங்களுக்கிடையில் தெரிவு செய்வர். (க-60)

## அச்சுவேலிப்பகுதியில்

# அதிக விளைச்சல்; சந்தைவாய்ப்பில்லை வெங்காயச் செய்கையைக் கைவிடும்நிலை

(அச்சுவேலி)

உற்பத்தி செய்த வெங்காயத்தினை சந்தைப்படுத்த முடியாது அச்சுவேலிப் பகுதி விவசாயிகள் பெரும் சிரமங்களைஎதிர்நோக்கியுள்ளனர்.

இடைக்காடு, தம்பாலை வளலாய், கதிரிப்பாய், வரன் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த விவசாயிகளின் வீடுகளில் 3 போகமாக உற்பத்தி செய்யப்பட்ட பெருந்தொகையான வெங்காயம் வீணாகப் பழுதடைவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

உள்ளூரில் நியாயமான விலைக்கு விற்கமுடியாமலும் கொழும்புக்கும் ஏற்றுமதி செய்ய முடியாமலும் வெங்காயம் வீடுகளில் தேங்கிக் கிடப்பதால் மேற்படி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் வெங்காயச் செய்கையை மேற்கொள்வதனைக்கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கு-57)

## கடந்த வருடம் மட்டும்

# மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் 111 பேர் மரணம்

கடந்த வருடம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 111 பேர் மரணமாகியுள்ளனர்என வைத்தியசாலை புள்ளிவிபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன;

இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் இறந்தவர்களாவர்.

இவர்களுள் படையினர், தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்கள், விடுதலைப் புலிகள் மற்றும் பொது மக்கள் என பல தரப்பினரும் அடங்குவர். (கு-60)

# சுவரொட்டி போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் இடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் அண்மையில் நடாத்தப்பட்ட ஓவிய, சுவரொட்டி போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று முன்தினம் சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட உதவி இயக்குர்ந சிவ தெட்சனாமூர்த்தி உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பெருமளவு கல்வியாளர்களும் கலந்து கொண்டனர்.

(க)

## வவுனியா பிரதம தபாலக

# துப்பரவுப் பணிகள் துரிதகதியில் ஆரம்பம்; மாநகர சபை தொழிலாளர் ஈடுபட்டனர்

(வவுனியா)

குண்டு வெடிப்பிற்கு இலக்கான வவுனியா தபாலகத்தை துப்பரவாக்கும் பணியில் நகர சபைத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் முதல் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

சேதமடைந்துள்ள பொருட்களை அப்புறப்படுத்துவதிலும் இரத்த வாடையும் பிணவாடையும் வீசுவதனால் பவுசர் மூலம் நீர் பாய்ச்சி கழுவப்பட்டமையையும் காணக்கூடியதாக இருந்தது.

அத்துடன் தற்காலிகமாக கருமபீடத்தை அருகிலுள்ள கட்டிடத்தில் அமைப்பதற்குரிய நடவடிக்கையை கட்டட திணைக்களத் தொழிநுட்ப அதிகாரிகள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-5)

# நெல் அறுவடை ஆரம்பம்

(திருநெல்வேலி)

மீசாலைப்பகுதியில் நெல் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில வயல் நிலங்களில் வெள்ளம் தேங்கிநிற்பதனால் அவ்விடங்களில் தாமதமாகவே அறுவடைகளை மேற்கொள்வதாக தெரியவருகிறது. (க-76)

# குளம் ஆழமாக்கல்

(மந்திகை)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட துன்னாலை நுணாவில் குளம் ஆழமாக்கப்பட்டு வருகிறது.

பிரதேச செயலகத்தின் அடிப்படை மூலதன நிதியிலிருந்து இவ் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(க-23)

# பண்ணிசை வகுப்புக்கள்

இணுவில் பதி.பராஜ. சேகரப்பிள்ளையார் கோயில் திருநெறிய தமிழ் மன்றக்கழகத்தினால் நடாத்தப்படும் பண்ணிசை, மிருதங்க. நடன. வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

சேரவிரும்புவோர் 03ஆம் திகதிக்கு முன் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. (கு-49)

ஊழி பெயரினும்
— தாம் பெயரார்
சான்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார்.
- குறள்

வலம்புரி

## துறவியர்க்கு வாழ்வியல் துணிவு

மெய்ஞ்ஞானவாழ்வில் தோய்ந்து துறை போனவர்கள் மக்கள் நலன் கருதி, மண்ணின் விடிவு கருதி உளமார உழைப்பது மனதிற்கு ஆறுதல் தருகிறது. நோயறிந்து நோய்க்கு மருந்து காணும் மகத்தான பணியில் காலூன்றி நிற்பது களிப்பைத் தருகிறது. மாண்புமிகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் இடைவிடா முயற்சியையே இங்கு சுட்ட விளைகிறோம்.

சமாதானத்தின் பெறுமதி உணர்ந்த உயர் உள்ளம் அன்னவரது. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் கேண்மையை அரும்பச் செய்ய அரும்பாடுபடுபவர். வன்னி மண்ணுக்கு காலத்துக்குக் காலம் வருகை புரிந்து தொடர்பு கொள்பவர். இன்னலுறும் மக்களை மனித நேயத்தோடு நோக்குபவர். அறிவியல் வறுமை, உண்டியின் வறுமை, உறையுளின் வறுமை என்பன கண்டு கண்ணீர் மல்குபவர் கருத்தாழம்மிக்க கருணைசால் வேண்டுகோள்களை விடுபவர்.

இவரது பணிக்கு அணை துணையாக மன்னார் ஆயர் மாண்புமிகு ராயப்பு அவர்களும் பணியாற்றுவதும், ஒரே பார்வையில் நிற்பதும் மறப்பதற்கில்லை. ஷெல் வீச்சினால் சல்லரித்துப் போன வாழ்விடங்கள் போல உடைந்த உள்ளங்களுக்காக இறைபணியில்- சமூக நலன் வேண்டி உழைக்கும் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் வழிவழி ஆண்டகை தியோகுப் பிள்ளைக்குப் பின் இந்த மண்ணுக்கு தொண்டின் வழி வந்தணைந்தவர்.

அந்த ஆண்டகையின் இருப்பினும் வலிய உள்ளம்போல், தளராத தணியாத உள்ள உறுதி கொண்டவர். இவர்கள் இறை சுதன்களாக- இன்னல் போக்கும் நல்ல சொத்துகளாக மண்ணில் மிளிர்பவர்கள்- மத வேறுபாடின்றி- சமூக பிரிவினை நோக்காது தொண்டுள்ளம் கொண்ட தூயவர். சமாதானப் புறா பறப்பதைப் பார்த்து மகிழ எம்மை வைக்கட்டும்; தாமும் பார்த்து ஆறுதலடையட்டும்.

மன்பதை சாமாதானம் வேண்டி நிற்கிறது. இறையருளால் சமாதானம் நாட்டில் மலர்வதாக.

- அன்புடன் ஆசிரியர்

# சகல முன்பள்ளிகளையும் உடன் பதிவு செய்து கொள்ள வேண்டும்

### டிவகலாலா பணிப்பு

(புலோலி)

அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டத்திற்கமைய சகல முன்பள்ளிகளையும் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சகல வலய முன்பள்ளி உதவிப்பணிப்பாளர்களுக்கும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறைச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலால பணிப்புரை விடுத்துள்ளார்.

திரு. டிவகலாலா முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சகல கல்வி வலயங்களிலுள்ள பாலர் பாடசாலைகளின் விபரங்களைச் சேகரிப்பதோடு காலத்திற்குக் காலம் அவை மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

பிள்ளைகளின் வளர்ச்சிப் போக்கினை அவதானித்து பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாலர் பாடசாலைகளில் சத்துணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பிள்ளைகளின் சுகாதார வசதிகளுக்கும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாலர் பாடசாலைகளுக்கான கட்டடங்கள், தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள், கற்றல், கற்பித்தல் உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சிறுவர் உரிமைகள் பற்றி பெற்றோருக்கான கருத்தரங்குகளை நடாத்துவதோடு பாலர்களின் கல்வி அபிவிருத்தியில் பெற்றோருக்கு அக்கறைகளையும், எழுச்சிகளையும் ஏற்படுத்துவதோடு பாலர் பாடசாலைகளின் பெற்றோர் சங்கங்களைச் சிறப்பாக இயங்கச் செய்ய வேண்டும். பாலர் பாடசாலைகள் இல்லாத கிராமங்களில் பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு தாய் சேய் நலன் பேண வேண்டிய திட்டங்களில் பயிற்சி வழங்கப்பட வேண்டும். பொதுப்பாடத் திட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

அமைச்சினால் முன்மொழியப்படும் ஆரம்ப பிள்ளைப் பருவவளர்ச்சி சம்பந்தமான திட்டங்களுக்கான பயிற்சிகளை வழங்கல் போன்ற சகல முன்பள்ளி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது. (க-52)

## இராசி பலன்

01.02.2000 செவ்வாய்க் கிழமை
(தமிழுக்கு தை 18)

ஏகாதசி காலை 12.22 வரை; கேட்டை பகல் 12.43 வரை, மரணயோகம், இராகு காலம் மாலை 4.06 முதல் 5.34 வரை, சுப நேரம் காலை 11.36 முதல் 1.05 வரை, ஸர்வஏகாதசி விரதம்.

**மேடம்:**
அநாவசிய பிரச்சினை, பண முடை, வெறுப்பு.

**இடபம்:**
மனஉறுதி, கடமை உணர்வு, தெய்வீகச் செலவு.

**மிதுனம்:**
தாய்வழிஉறவு, சுபநிகழ்ச்சி, காரிய சித்தி.

**கடகம்:**
மனக்கிலேசம், வழிப்பயம், அந்நியர் பகை.

**சிங்கம்:**
குழப்பமடைதல், அகால உணவு, கீழ்ப்படிவு.

**கன்னி:**
முதியோர் சிந்தனை. கடன் வரவு, கலகலப்பு.

**துலாம்:**
வாய்ப்புக் குன்றல், அடிமை நிலை, நேய உணர்வு,

**விருச்சிகம்:**
தொழில் சிறப்பு, நண்பர் உதவி, பயண அனுகூலம்.

**தனுசு:**
சகோதர வெறுப்பு, காதல் தோல்வி, தனிமைப்படல்.

**மகரம்:**
பழைய உறவு, காரிய சித்தி கணவன் பாராட்டு.

**கும்பம்:**
புதிய முயற்சி, கல்விச் சிறப்பு, ஆசாரம் பேணல்.

**மீனம்:**
குற்ற உணர்வு, அதிகாரிகள் பயம், பணச் செலவு,

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

### உரும்பிராயில்

# கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் அண்மையில் கைதுசெய்யப்பட்ட இருபாடசாலை மாணவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு பல்கலைக்கழக மாணவர்களாகிய நாமும் ஆதரவு வழங்கவேண்டிய நிலை உருவாகும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உரும்பிராயில் பாடசாலை மாணவர் கைது தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த வாரம் உரும்பிராய் பகுதியில் வைத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பாடசாலை மாணவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சம்பவமானது குடாநாட்டு மாணவர்கள் மத்தியில் பெரும் வேதனையை ஏற்படுத்தியதோடு பாடசாலை மாணவர்களுக்கு பெரும் அச்சத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

இது மாணவர்களது கல்வி நடவடிக்கையில் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்த வழிவகுக்கின்றது. இதேசமயம் உரும்பிராய் சந்திரோதய மாணவன் சிறிகாந்தராசா விநோத் பாடசாலையில் கல்விபயிலும் வேளையில் வைத்து கைதுசெய்யப்பட்டதுடன், இக் கைது தொடர்பாக இன்றுவரை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கோ, ஆசிரியருக்கோ அறிவிக்கப்படவில்லை.

இவ்வாறே வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவியின் கைது நடவடிக்கை பற்றியும் குறித்த பாடசாலை அதிபருக்கும் தெரிவிக்கப்படவிலை. இந்த நடவடிக்கைகள் மாணவர்கள்மத்தியில் கடும்விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது போன்ற கைது நடவடிக்கைகளை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

## வருடாந்த திருவிழா

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் யூபிலி யாத்திரைத் தலமாக யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் பிரகடனப்படுத்தப்பட்ட குருநகர் பரிசுத்த புதுமை மாதாஆலயத்தின் வருடாந்த திருவிழாவும் தேர் பவனியும் எதிர்வரும் 3ம் திகதி காலை 7 மணிக்கு இடம் பெறவுள்ளது. (க-77)

### உரும்பிராயில் மாணவர் கைது

# ஆசிரியர் பெற்றோர் மத்தியில் பெரும் அச்ச நிலை எழுந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே யுத்த சூழ்நிலை காரணமாக மாணவர்களின் கல்வி நிலை மந்தகதியில் இருக்கும் இச் சூழ்நிலையில் உரும்பிராயில் பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்பட்ட நிகழ்வானது பாடசாலை மாணவர், ஆசிரியர் பெற்றோர் மத்தியில் பெரும் அச்ச நிலையை தோற்றுவித்துள்ளது.

உரும்பிராயில் பாடசாலை மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தமிழ் ஈழ விடுதலை இயக்க யாழ்.மாவட்ட அமைப்பாளர் என். கே. விந்தன் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

உரும்பிராய் சந்திரோதய மகாவித்தியாலய மாணவன் (வயது 12) வினோத் ஸ்ரீஸ்கந்தராசாவையும் அவரது சகோதரியான வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவியான பிரியா ஸ்ரீஸ்கந்தராசாவையும் (வயது 16) இவர்களது தாயாரான திருமதி ஸ்ரீஸ்கந்தராசாவளர்மதி (வயது 42) ஆகியோரை கடந்த 25-ம் திகதியன்று பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பாடசாலையிலும் உரும்பிராயில் அவர்களின் வீட்டிலும்வைத்து எவ்விதகாரணமும் கூறாமல் கண்மூடித்தனமாக கைது செய்து கொழும்பு கொண்டு சென்று தடுத்து வைத்திருப்பதன் எதிரொலியாக நேற்று யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும்பாடசாலைகளை பகிஸ்கரிக்கும் நிலைக்குதள்ளப்பட்டுள்ளனர்.

இக் கைதுகள் விடயமாக யாழ். குடா பலாலி படைத் தலைமையக இராணுவ உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு தொலைபேசி மூலம் எமது ஆட்சேபனையை தெரிவித்துள்ளதுடன் துரித கதியில் இவர்களை விடுதலைசெய்ய வேண்டுமெனவும் இனிமேல் இப்பேற்பட்ட தவறுகள் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டதுடன் படை அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனம் செலுத்தாவிடின் பொலிஸ்மா அதிபர், ஜனாதிபதி ஆகியோருக்கும் இக் கைதுகள் விடயமாக முறையிடவுள்ளோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (க)

## படையினரால் சுற்றி வளைப்பு

கொடிகாமம், கொயிலாமனை ஆகிய பிரதேசங்களை அண்மையில் சுற்றி வளைத்த பாதுகாப்புப் படையினர் அப்பகுதி மக்கள், மற்றும்போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த பிரயாணிகள் அனைவரையும் கட்டை முறிச்சான் பிள்ளையார் கோயிலுக்கு அழைத்துச் சென்று அடையாள அட்டைகளைப் பார்வையிட்டனர்.

இந்தச்சம்பவத்தின் போது சந்தேகத்தின் பேரில் எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிய வருகிறது. (க-28)

### மாணவர் கைது தொடர்பாக

# குடாநாடு முழுவதும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டன

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு மாணவர்களை ஆண், பெண் வேறுபாடின்றி மாணவி பிரியா விடுவிக்கப்படும் வரை பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு கோரும் துண்டுப்பிரசுரங்கள் யாழ்ப்பாணம் பூராகவும் ஒட்டப்பட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

குடா நாட்டு மாணவர்களே; என்ற தலைப்பிலான இத்துண்டுப் பிரசுரங்கள் சகல பாடசாலை மாணவர் ஒன்றியம் எனும் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது. (க-14)

### மட்டக்களப்பில் பாஸ் நடைமுறை

# தற்காலிகமாக இடைநிறுத்தம் பாதுகாப்புஅமைச்சின்செயலர்உறுதி

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்புத் தரப்பினரால் அமுல்ப்படுத்தப்படவுள்ள 'பாஸ்' குறித்து மீள் பரிசீலணை செய்யப்படவுள்ளது.

இப் புதிய திட்டத்தினால் எதிர் நோக்குவதாக கருதப்படும் நடைமுறைப் பிரச்சினை தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் வரை 'பாஸ்' நடைமுறையை அமுல் படுத்துவதில்லையென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்சந்திரானந்தா டி சில்வா உறுதியளித்துள்ளார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாகிர் மௌலான பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை நேரில் சந்தித்த போதே இவ்வாறு உறுதியளிக்கப்பட்டது. இச் சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர்ஏ.எச்.எம். அஸ்வரும் உடன் இருந்தார்.

இதே வேளை மட்டக்களப்பு ஆரையம்பதியில்பாஸ் நடைமுறையை எதிர்த்து இருபத்தையாயிரம் பேர் கையெழுத்திட்டு ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்புவதெனவும் நேற்றுத்தீர்மானிக்கப்பட்டது.

(ந)

## சிறிசேன...

பிட்டதோடு மக்கள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடும் சந்தர்ப்பத்தை இப்புதிய கட்சி தோற்றுவிக்கும் எனவும் தெரிவித்தார்(7)

## மூன்று...

கத் தெரியவருகிறது.

இம்மாணவர்களின் விடுதலை தொடர்பாக அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்ட போதே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை கடந்த டிசம்பர் மாதம் ஜாஎலவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்பின் சூத்திரதாரியெனக் கருதப்படுபவர் கைது செய்யப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர் எனவும் தற்கொலைக் குண்டுதாரியை இனங்காண்பதற்காக மரபணு பரிசோதனையை மேற்கொள்ளும் பொருட்டே இவர்கள் கைது செய்யப்பட்டதாக விசேட புலனாய்வுப் பிரிவு தெரிவித்ததாக செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (ந)

# கொட்டடி சீனிவாசம் வீதியில் கிரனேட் வீச்சு இளைஞர் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கொட்டடி சீனிவாசம் வீதியில் நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் கிரனேட் வீச்சும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் இடம் பெற்றது.

குறித்த வீதியில் உள்ள வீடொன்றினைச் இராணுவத்தினர் சுற்றிவளைத்ததாகவும் அச்சமயம் கிரனேட் வீச்சும் இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவத்தைத்தொடர்ந்து வீடு தீப்பற்றி எரிந்ததாகவும் பின்பு அயலவர்களின் உதவியுடன் அத்தீ அணைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை இச்சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் அவரின் சடலம் இனங்காணும் பொருட்டு யாழ், போதனாவைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ந)

### வெலிக்கடை தமிழ் பெண் கைதிகள்

# அறிக்கைகளை மார்ச் 15க்கு முன்னர் சட்டமா அதிபர் திணை. சமர்ப்பிக்கவும்!

## தொல்லை தவிர்ப்புக்குழு உத்தரவு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 56 தமிழ்ப் பெண் கைதிகளின் விசாரணை அறிக்கையை மார்ச் மாதம் 15ஆம்திகதிக்கு முன்சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று பொலிஸ் தலைமையகத்திற்கு தொல்லை தவிர்ப்புக் குழு உத்தரவிட்டுள்ளது.

விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் திரு.பட்டி வீரக்கோன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஆர். யோகராஜன் எம்.பி., இரா. சம்பந்தன் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதே வேளை களுத்துறைக் கைதிகளை பாதுகாப்பு அமைச்சு மாற்றுவதற்கான காரணம் என்ன என்று விளக்கம் கோரிபாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் ஒன்றை தொல்லை தவிர்ப்புக் குழு எழுதியிருப்பதாகவும்இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கரலியத்த பாதுகாப்பு அமைச்சின் உத்தரவை மாற்றியமைக்க காரணம் என்ன என்று தெரியாது எனக் கூறினார்.

## காங்கேசன்...

17ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டதுடன், ஒவ்வொரு மாதமும் இவர்களை யாழ் நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்துமாறும் 28/2/2000 அன்று முதலாவதாக ஆஜர் படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (வ-04)

## இடைக்கால...

அமைப்பு சீர்திருத்த சட்ட மூலம் இன்னமும் மூன்றுமாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப் படவிருப்பதால் அமைக்கப் படவிருக்கும் உத்தேச இடைக்கால நிர்வாக சபை வேவையற்றது என்று கூறியுள்ளார். (வ)

## கிஷோரின்..

ணிலையில் இருவரும் ஆஜர் செய்யப்பட்டபோதே மார்ச் மாதம் 3-ந்திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் கைதுசெய்யப்பட்ட கிஷோர் அண்மையில் களுத்துறைச் சிறையில் இடம் பெற்ற சிறைக்காவலாளர்களின் தாக்குதலினால் காயமடைந்திருந்தார்.

அவரின் உடலில் காயம் இருப்பதை அவதானித்த நீதிபதி அது பற்றிக் கேட்டபொழுது களுத்துறைச் சிறைச்சாலையில் கிடைத் பரிசு என கிஷோரின் சட்டத்தரணி எம். எல். எம். அமீன் தெரிவித்தார் (ந)

# மரண அறிவித்தல்

## கதிரவேலு தம்பிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)

[யட்டதாரிய எஸ்ரேற், உந்துக்கொல]

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் பலகாட்டையும், திருநெல்வேலியையும் வசிப்பிடமாகக் கொண்டவருமான கதிரவேலு தம்பிப்பிள்ளை 31.01.2000 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலம்சென்ற சிவபாக்கியத்தின் அன்புத் துணைவரும் காலம்சென்ற கதிரவேலு காசுவதி தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற கந்தையா செல்லம்மாவின் மருமகனும், காலஞ்சென்ற கடவத்தை பிரபல வர்த்தகர் பொன்னம்பலத்தின் பெறாமகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் செல்லத்தம்பி ஆகியோரின் தம்பியாரும், பூரணத்தின் மைத்துனரும், சிவராசா (ஒசானிக் இம்பெக்ஸ்), விஜயலட்சுமி, புனிதகுமாரி, சிவசண்முகராசா (மங்கை சில்க் சுன்னாகம்), லயன் சற்குணராசா (சீமாட்டி புடைவைக்கடல், மங்கை சில்க் யாழ்), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசோதி. காலஞ்சென்ற கதிரவேலு. நவரத்தினம் (மங்கை யாழ்) சிவமணி, Dr. மனோன்மணி, குகநேசன் (C.T.B) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவநிதி, சிவரூபன் தயாநிதி, தவநிதி, செந்தூரன், சிவவதனா, சிவமனோகர், சிவதீபன், தர்சனா, ஜீவணா, தர்சன், கஜந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01.02.2000 செவ்வாய்க்கிழமை (இன்று) மாலை 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''சுமங்கலி'' தகவல்
531, பலாலி வீதி, லயன் த. சற்குணராஜா
திருநெல்வேலி. [மகன்]

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### உடுவிலில் அதிசயம்

# அம்மா; மாமா; அப்பம்மா; அப்பா;என உறவுமுறைபேசும் பூனைக்குட்டி!

(உடுவில்)

பூனை கதைக்கும் அதிசயம் ஒன்று நேற்று முன்தினம் முதல் உடுவில் பகுதியில் நடக்கின்றது.

உடுவில் செபமாதா ஆலயத்திற்கு அண்மையில் உள்ள திருமதி தவராணி என்பவரின் வீட்டில் உள்ள பூனையே மனிதர்களைப்போல் கதைக்கின்றது.

பூனை கதைக்கும் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது: சிறு குட்டியாக உள்ளதிலிருந்துதவராணியின்மகளான இராமநாதன் கல்லூரியில் 6-ம்ஆண்டில்கல்வி பயிலும் சுதர்சினி இப் பூனையை செல்லமாக வளர்த்து வந்ததாகவும் அவர் அடிக்கடி சொல்லிக் கொடுத்து வந்ததாலேயே சில சொற்களை பூனை கதைப்பதாக சுதர்சினி கூறுகிறார்,

யார் உனக்கு அடித்தது? எனக் கேட்க, 'அம்மா' என்றும்,

யார் உன்னைத் தூக்கியெறிந்தது எனக் கேட்க 'மாமா' என்றும், மேலும் அம்மம்மா அப்பா போன்ற சொற்களையும் மிகவும் துல்லியமாகக் கதைப்பதைக் காணமுடிந்தது.

பூனை கதைப்பதைக் கேட்க ஒருவரிடம் இருந்து 5 ரூபா வீதம் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-4-12)

# திருட்டுப்பொருட்களுடன் சூட்டுக்குப்பலி பாண்டியன்தாழ்வில் சம்பவம்

(ஈச்சமோட்டை)

ஓடு பிரித்து வீட்டிற்குள் இறங்கி திருடமுயன்ற கோஷ்டி ஒன்று இராணுவத்தின் சூட்டுக்கு இலக்காகிய சம்பவம் பாண்டியன் தாழ்வுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

வீட்டு ஓடுபிரித்து இறங்கிய இத்திருடர் கோஷ்டி வீட்டினுள்ளிருந்த றேடியோ செட் ஒன்றை திருடிக் கொண்டு ஓடியபோது வீட்டுச் சொந்தக்காரர் தொடர்ந்து துரத்தி வந்ததாகவும் இடையில் துப்பாக்கிச் சத்தம் கேட்டு வீட்டுச் சொந்தக்காரர் வீடு திரும்பி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடிந்தபின் வந்து பார்த்தபோது பழைய பூங்கா வீதிப் பகுதியில் திருடன் சூட்டுக்கிலக்காகி மரணமடைந்த நிலையில் அருகில் றேடியோ செற்றும் காணப்பட்டது இவருடன் வந்த இன்னும் சிலர் காயங்களுக்கு இலக்காகி தப்பிச் சென்றதற்குரிய இரத்தத்தடயங்கள் ஆங்காங்கே காணப்பட்டன.

பிரஸ்தாப நபர் திருமணமாகி நான்கு பிள்ளைகளின் தகப்பனென்பதும் இவர் திருட்டு கோஷ்டியின் தலைவனென்றும் அவர் பல களவுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் முன்னரும் இதற்காக சிறைத் தண்டனை அனுபவித்தவர் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளையில் பழைய பூங்காவீதிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு குண்டுச் சத்தத்தைத் தொடர்ந்து பலத்த துப்பாக்கி வேட்டு சத்தங்களும் இடம் பெற்றதாக வேறொரு தகவல் தெரிவிக்கின்றது. (க-59-33)

## தீவகத்திலும் பகிஷ்கரிப்பு

(தீவகம்)

உரும்பிராய் மாணவர்கள் கைது தொடர்பாக, அவர்களை விடுவிக்கக் கோரி தீவுப் பகுதி பாடசாலை மாணவர்களும் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதனால் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாக இருந்தது. (வ-75)

## வவுனியா...

ஊழியர்களுக்கும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அதற்குரிய நட்ட ஈட்டினை வழங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் குண்டு வெடிப்பின் போது இரண்டு அரச ஊழியர்களும் நான்கு பொதுமக்களும் நான்கு பாதுகாப்பு படையினரும் கொல்லப்பட்டது தெரிந்ததே, (வ-103)

## யாழ். மாவட்ட...

லுள்ள பிரபல கல்லூரிகளிலும் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

வலிகாமம் பகுதியிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகவும் குறைந்த எண்ணிக்கையில் காணப்பட்டது.

பாடசாலைப் பகிஷ்கரிப்பு இன்றும் தொடரும் என மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

## மன்னாருக்கு உணவுப் பொருள்

மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு 20 லொறிகளில் உணவு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக மன்னார் அரச அதிபர் ரி.விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்திற்கு பிரதிமாதமும் 27 லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பி வைப்பதற்கு அனுமதி கிடைத்திருப்பதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

## கல்வி நிறுவனம் தீவைப்பு

(இருபாலை)

இருபாலை டச்சு வீதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனக் கொட்டகை ஒன்று நேற்று முன்னிரவு சிலவிஷமிகளால் தீயிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
புதிய வெளியீடு
விஜயகாந் (இரட்டை வேடம்)
பிரபு தேவா, மீனா
நடித்த
வானத்தைப் போல
(CD பிரதி)
(சிறந்த குடும்பச் சித்திரம்)
காட்சிகள்
10. 30, 2. 30 (ப.நே)
(00115)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயாணியின்
சூரிய வம்சம்
(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)